1989 பிப்ரவரி 20] [திரு. கே. என். நேரு]

சொன்ன பகுதியிலே தெரிவிக்கப்படவில்லையா என்பதை விசாரித்து விவசாயிகள் அனைவருக்கும் தெரிவிக்கின்ற முறையிலே நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. என். பழனிவேல்: இன்னொரு கேள்வி அனுமதிக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அனுமதிக்க இயலாது. அருள்கூர்ந்து அமருங்கள் (குறுக்கீடு). அவை மரபை மீறாமல் அருள்கூர்ந்து அமருங்கள்.

***மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்க வந்ததற்கு ஒரு சிறு விளக்கத்தை மட்டும் தெரிவித்துக் கொள்கிறேன். மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் பதில் சொல்லியிருக்கிறார்கள். ஆனால் இந்தத் துறையிலே இருக்கக்கூடிய ஒரு சூழ்நிலை என்னவென்றால் "பிரேக் டவுன்" என்பது அவர்களுக்கே தெரியாமல் ஏற்படுவது. அப்படிப்பட்ட சூழ்நிலையில் முன் கூட்டியே எந்த விவசாயிக்கும் தெரிவிக்க முடியாத ஒரு நிலைமை ஏற்படுகிறது. இருந்தாலும் கூட 'பிரேக் டவுன்' ஏற்பட்ட உடனேயே அந்தப் பகுதிக்கு அறிவிக்க அரசாங்கம் தக்க நடவடிக்கையை எடுக்கும்.

4. அறிவிப்பு.

மதுவிலக்கு (திருத்த) சட்டமுன்வடிவு, 1989 (ஆ.இ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு மது விலக்கு (திருத்த) சட்ட முன்வடிவினைப் பேரவையில் அறிமுகம் செய்யவும், ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளவும் ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

5. சட்ட முன்வடிவுகள்.

(அ) மதுவிலக்கு (திருத்த) சட்ட முன்வடிவு, 1989.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் பேரவைச் செயலர் திரு. எல். கணேசன் அவர்கள்.

திரு. எல். கணேசன் (முதலமைச்சரின் பேரவைச் செயலர்): மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

[திரு. எல். கணேசன்] [1989 பிப்ரவரி 20

"1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்கு (திருத்த) சட்ட முன்வடிவைப் பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்.".

(முற்பகல் 9-30)

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

திரு. எல். கணேசன் (முதலமைச்சரின் பேரவைச் செயலர்): இச்சட்ட முன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

(ஆ) மதுவிலக்கு (இரண்டாம் திருத்த) சட்டமுன்வடிவு, 1989

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்கு (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்.".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப்பெற்று, அனுமதி வழங்கப் பெற்றது.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா: இச்சட்ட முன் வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இச்சட்ட முன்வடிவு அறி முகம் செய்யப் பெற்றிருக்கிறது.

(இ) ஊராட்சிகள் (திருத்த) சட்ட முன்வடிவு, 1989.

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்: